திரு. டி. மார்டின் : மதுரை மத்தியச் சிறையில் கைதிகளுக்கு வழங்கப்பட்டுக்கொண்டிருந்த கடலை மிட்டாய் நிறுத்தப்பட்டிருக்கிறது. கொடுக்கப்பட்ட எண்ணெய் அளவு குறைக்கப்பட்டிருக்கிறது. என்றெல்லாம் ஏதேனும் புகார்கள் இந்த அரசுக்கு வந்ததா என்று கேட்க விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. மாதவன் : அதுபற்றி தகவல் இல்லை. கனம் அங்கத்தினர் அவர்களுக்கு இருந்தால் அனுப்பி வைக்கலாம்.

THIRU K. VINAYAKAM : May I know whether the Minister was any day a prisoner in our State, what his experience was, what the type of food that he got was and whether he was given any better treatment than the ordinary prisoners ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : இரண்டு மூன்று முறை சிறையில் இருந்திருக்கிறேன். அப்போது இருந்த நிலைமையை நான் இந்த சட்ட சபையிலேயே சொல்லி இருக்கிறேன்.

*381 வினா.—**திரு. கொ. இர. ஞானசம்பந்தன் :** மதிப்பிற்குரிய சட்ட-கூட்டுறவு அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

தமிழகத்தில் உள்ள சிறைகளில் உள்ள கைதிகளுக்கு ஒரு நாளைக்கு, ஒரு நபருக்கு 1966–67 ஆண்டில் உணவிற்காக நிர்ணயிக்கப்பட்ட தொகை எவ்வளவு ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : சிறைச் சாலைகளில் கைதிகளுக்கு உணவு அளிப்பதற்குச் செலவு வீதம் எதுவும் குறிப்பிடப்படவில்லை. கைதிகளுக்கு வழங்கவேண்டிய உணவு அளவு குறிப்பிடப்பட்டுள்ளது. அந்த அளவின்படி கைதிகளுக்கு உணவு அளிக்கப்படுகிறது.

திரு. கொ. இர. ஞானசம்பந்தன் : ஒரு கைதிக்கு ஒரு நாளைக்கு எவ்வளவு வேண்டுமானாலும் செலவு செய்யலாம் என்றால், தினசரி நல்ல கறி, குழம்பு, தயிர் ஆகியவைகளுக்காக அளவு இல்லாமல் செலவு செய்யப்படுமா ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : கைதிகளுக்கு பொதுவாக எவ்வளவு உணவு கொடுக்கவேண்டுமென்பதற்குத் தான் விதி இருக்கிறது. எந்தெந்த உணவு எவ்வளவு கொடுக்கப்படவேண்டுமென்பதற்கும் விதி இருக்கிறது. அவர்களுக்கு நல்ல முறையில், நோயில்லாமல் வாழ்வதற்குரிய வகையில் உணவு அளிக்கப்பட வேண்டுமென்பதற்குத்தான் விதி இருக்கிறது.

Marriage Registrars

*382 *Q.*—THIRU K. VINAYAKAM : Will the Hon. the Minister for Law and Co-operation be pleased to state—

(*a*) whether it is a fact that temple Executive Officers have been appointed as Marriage Registrars : and

(*b*) if so, the purpose or object of such appointments ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) ஆம்.

(இ) கோவில்களில் நடக்கும் இந்து திருமணங்களைப் பதிவு செய்வதற்காக அந்தந்தக் கோயில் நிர்வாக அதிகாரிகள் திருமணப் பதிவாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.